**+1 வணிகவியல் முதல் இடைப்பருவத் தேர்வு ஜீலை -25**

1.(இ) பாண்டியர்
2.(இ) சிறப்புத் தொழில்
3.(இ) பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள்
4.(அ) தனியாள் வணிகம்
5.(ஆ) கூட்டுவாரிசுதாரர்
6.(ஈ) பங்குதாரர்கள்
7.(இ) யார் வேண்டுமானாலும் இருக்கலாம்
8.(ஆ) பரவலாக்கம்
9.(இ) அமைப்புமுறை ஏடு
10(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) (A) விற்கு சரியான விளக்கம்

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10**

11. **வேலை:** கூலி அல்லது ஊதியத்திற்காக மற்றவர்களுக்கு பணி செய்வது வேலை ஆகும்.

12. **கூட்டுரு சாரா பேரளவு நிறுவனங்கள்:** கூட்டுரு சாரா நிறுவனங்கள் சட்டப்படி பதிவு செய்ய வேண்டிய கட்டாயமில்லை. இதில் உரிமையும் மேலாண்மையும் ஒருவரையே சாரும். எகா:- தனியாள் வணிகம், கூட்டாண்மை நிறுவனம், இந்துக் கூட்டுக் குடும்பம்.

13. **இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள்**
தயாபாகா மற்றும் மிட்டாக்சரா

14. **பட்டய (அ) சாசன நிறுமம்:** ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. வழங்கப்பட்ட சாசனத்தில் கூறியுள்ள விதிமுறைகளின் படி இவை செயல்படும்.

15. **இராக்டேல் முன்னோடிகள்:** இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை இங்கிலாந்தில் 1844 ஆம் ஆண்டு 28 நெசவாளர் உறுப்பினர்களுடன் “ராக்டேல் சமமான முன்னோடிகளின் சொசைட்டி” (இராக்டேல் முன்னோடிகள் சங்கம்) என்ற பெயரில் தொடங்கினார்.

16. **பண்டமாற்று முறை:** ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாக பரிமாற்றம் செய்யப்படும் முறையேப் பண்டமாற்று முறை எனலாம்

17. மருத்துவர் ஆலோசனைக் கட்டணமாக ரூ 10000 வசூலிக்கிறார். இது **பொருளாதாரம் சார்ந்த** செயல்பாடுகள்

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X3=15**

18. **மருவூர்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம்** - பூம்புகார் போன்ற பெரிய நகரத்தில் மருவூர்பாக்கம் (உள்நாட்டு நகரம்) மற்றும் பட்டினப்பாக்கம் (கடலோர நகரம்) ஆகியவை உணவுப் பொருள்கள் மற்றும் இதர பல்பொருள்கள் வியாபாரம் செய்யக் கூடிய இடங்களாகும். மேலும் அங்கு அங்காடிகளையும், பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன

19. **தனியாள் வணிகத்திற்கு சில உதாரணங்கள்:** இனிப்பு கடை, பெட்டிக் கடை, அழகு நிலையங்கள், தையலகம், சலவை நிலையம், பழ வியாபாரம்.

20. **கூட்டாண்மை ஒப்பாவணம்** என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படும் உடன்பாடு ஆகும். இது எழுத்து வடிவிலான ஒரு ஆவணமாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இருப்பினும், கூட்டாண்மை உடன்பாடு எழுத்து வடிவில் இருந்தால் பிற்காலத்தில் தவறான கருத்துக்களினால் ஏற்படும் தகராறுகளை மற்றும் மனக் கசப்புகளை தவிர்க்கலாம். இந்த ஒப்பாவணம் முறையாக தயாரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும்.

21. **அயல் நாட்டு நிறுமம்:** இந்தியாவிற்கு வெளியே வேறு நாடுகளில் பதிவு செய்யப்பட்டு, இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம் அயல் நாட்டு நிறுமம் எனப்படும். இந்தியாவின் சட்டங்கள் அவற்றிற்கு பொருந்தும் என்பதால், கீழ்க்கண்ட ஆவணங்களைக் கண்டிப்பாக நிறுமப் பதிவாளர்களிடம் 30 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும். **அவையாவன:-**
சாசனத்தின் சான்றிதழ் நகல் அல்லது கூட்டுருவாக்கத்தின் சான்றிதழ் அல்லது அமைப்பு முறையேடு மற்றும் சங்க நடைமுறை வழிகள் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
நிறுமத்தின் பதிவு அலுவலகம் உள்ள இடம்.
இயக்குநர் மற்றும் செயலரின் பட்டியல்
இந்தியாவின் தலைமை வியாபார அலுவலகத்தின் முகவரி.
நிறுமத்தின் செயல்பாடுகளுக்கு ஒப்புதல் வழங்கிய இந்திய குடிமகனின் பெயர் மற்றும் முகவரி.

22. **வீட்டு வசதி கூட்டுறவு:** உறுப்பினர்களுக்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்றுத்தரும் சங்கங்களே, வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் எனப்படுகின்றன.
சொந்தமாக வீடு கட்ட விரும்பும் நபர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீடு கட்ட கூட்டுறவு சங்கங்களை நிறுவுகின்றனர்.

இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு சுமார் 10 முதல் 20 ஆண்டு கால தவணையில் வீட்டு கடன் தந்து, அவர்களை சொந்த வீடு கட்டிக் கொள்ள உதவுகின்றன.
சில வீட்டுச் சங்கங்கள், மொத்தமாக காலி நிலங்களை வாங்கி வீடு கட்டி உறுப்பினர்களுக்கு வாடகைக்கு வீடுகளை விடவும் செய்கின்றன.
வாடகைக்கு குடி இருக்கும் நபர் அந்த வீட்டில் முழு மதிப்பையையும் செலுத்தி உரிமையாளராக ஆகவும் முடியும்.

**23. பன்னாட்டு நிறுவனங்களின் பெயர்: (3)**

1. பாட்டா - பாட்டா இந்தியா
2. கோல்கேட் பாமொலிவ் -கோல்கேட் இந்தியா
3. சோனி கார்ப்பரேசன் -சோனி இந்தியா
4. சுசூகி - மாருதி சுசூகி
5. டைமெக்ஸ் - டைமெக்ஸ் வாட்ச்

**24. மரபுசார் உற்பத்தித் தொழிலுக்கு உ:ம் (3)**
கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 2X5=10**

| 25. அ. தொழில் | சிறப்புத் தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|
| **உருவாக்கும் முறை:-** தோற்றுவிப்பாளர்களின் முடிவுகள், பதிவு மற்றும் பிற நடைமுறைகள் அனைத்தும் சட்டத்திற்கு உட்பட்டது. | சிறப்புத் தொழிலமைப்பை உருவாக்குதல், உறுப்பினர் சான்று பெறுதல் | சேவைக்கான ஒப்பந்தம் அமைப்பது, நியமன கடிதம். |
| **பணியின் தன்மை:-** சரக்கு மற்றும் சேவையை பொது மக்களுக்கு அளித்தல் | சிறப்புத் தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல் | பணியார்களுக்கு வழங்கிய செயலை செய்தல். |
| **தகுதி:-** குறைந்தபட்ச தகுதி என்று ஏதும் இல்லை. | குறிப்பிட்ட பிரிவில் சிறப்புத் தகுதியும், பயிற்சியும் பெறுதல். | குறைந்த பட்ச தகுதி தேவை இல்லை. |
| **அடிப்படை நோக்கம்:-** சமுதாயத்தின் தேவையை பூர்த்தி செய்து, இலாபம் ஈட்டுவது. | சேவை புரிதல் | முதலாளிகளுக்கு செயலை செய்து முடிப்பதுடன், கூலி, சம்பளம் பெறுதல். |
| **வெகுமதி:-** இலாபம் | தொழில் முறை கட்டணம் | கூலி, சம்பளம். |
| **இடர்:-** இலாபம், நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும். | கட்டணம் நிச்சயமானது மற்றும் நிலையானது. | நிலையான கூலி / சம்பளம் இடர் ஏதும் இல்லை. |
| **உரிமை மாற்றம்:-** சில நடைமுறைகளைப் பின்பற்றி உரிமை மாற்றம் செய்யப்படும். | உரிமை மாற்றம் செய்ய இயலாது. | உரிமை மாற்றம் செய்ய முடியாது. |

**25.ஆ. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?**

**பெயர் குறித்த உட்பிரிவு:-** நிறுவனத்திற்கு சட்ட பூர்வமாக அங்கீகரித்த பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நிறுமத்தின் பெயரை ஒத்திருத்தல் கூடாது. அமைப்பு முறையேட்டில் உறுப்பினர்களும் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால், நிறுமத்தின் பெயருடன் “வரையறுக்கப்பட்டது” என்ற வார்த்தை சேர்க்க வேண்டும்.

**இடங்குறித்த உட்பிரிவு:-** நிறுமத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம், இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும். தொழில் தொடங்குவதற்கு முன்பே, நிறுமத்தின் பதிவு அலுவலகத்தைத் தெரிவிக்க வேண்டும்.

**நோக்கம் குறித்த உட்பிரிவு:-** நிறுமத்தால் செயல்படுத்தக் கூடிய நோக்கங்கள் அனைத்தையும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். நிறுமத்தின் துணை நோக்கங்கள் மூலம் முக்கிய நோக்கங்களை அடையத் தேவையான வழிமுறைகளும் விளக்கப்பட்டிருக்கும். இதில் குறிப்பிடப் பெறாத எச்செயலிலும் நிறுமம் ஈடுபடாது.

**பொறுப்புக் குறித்த உட்பிரிவு:-** பொறுப்புறுதி நிறுமமாயின், அது கலைப்பிற்குள்ளாக நேரிடும் போது, அதன் நிறுமச் சொத்துக்கள் அந்த நிறுமத்தின் நிதிசார் பொறுப்புகளை தீர்க்க இயலாத நிலையில் ஒவ்வொரு உறுப்பினரும் வழங்குவதாக உத்திரவாதம் அளித்த தொகை இங்குக் குறிப்பிடப்படும்.

**முதல் குறித்த உட்பிரிவு:-** நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதல், பங்குகளின் வகைகள் மற்றும் பெயரளவு முதல் (ஒரு பங்கின் குறைந்த பட்ச மதிப்பு) ஆகியவற்றைப் பற்றி இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**அமைப்பு குறித்த உட்பிரிவு:-** பங்குதாரர்கள் தாங்கள் ஒருங்கிணைந்து நிறுமமாக செயல்பட விரும்பும், தங்களின் விருப்பத்தை இது வெளிப்படுத்துகிறது. பொது நிறுமம் எனில் ஏழு

நபர்களும், தனி நிறுமம் எனில் இரண்டு நபர்களும், அமைப்பு முறையேட்டில் சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்து இட வேண்டும்.

**26.அ. கூட்டுறவு சங்கத்தின் வகைகளை கூறுக?**

**வீட்டு வசதி கூட்டுறவு:** உறுப்பினர்களுக்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்றுத்தரும் சங்கங்களே, வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் எனப்படுகின்றன.

சொந்தமாக வீடு கட்ட விரும்பும் நபர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீடு கட்ட கூட்டுறவு சங்கங்களை நிறுவுகின்றனர்.

இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு சுமார் 10 முதல் 20 ஆண்டு கால தவணையில் வீட்டு கடன் தந்து, அவர்களை சொந்த வீடு கட்டிக் கொள்ள உதவுகின்றன.

சில வீட்டுச் சங்கங்கள், மொத்தமாக காலி நிலங்களை வாங்கி வீடு கட்டி உறுப்பினர்களுக்கு வாடகைக்கு வீடுகளை விடவும் செய்கின்றன.

வாடகைக்கு குடி இருக்கும் நபர் அந்த வீட்டில் முழு மதிப்பையையும் செலுத்தி உரிமையாளராக ஆகவும் முடியும்.

**தயாரிப்பாளர்கள் (உற்பத்தியாளர்) கூட்டுறவுச் சங்கம்** உற்பத்தியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுவது, உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் ஆகும்.

உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒரு மைய இடத்திற்கு வந்து, உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடலாம் அல்லது அவரவர் இருப்பிடத்தில், உற்பத்தி செய்த முடிவுற்ற பொருளை சங்கத்திடம் ஒப்படைக்கலாம்.

இவ்வகை உற்பத்தி சங்கங்கள், செலவை குறைத்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளை மையமாக திரட்டி ஒட்டு மொத்தமாக சந்தை இடுகின்றன.

எகா:- கூட்டுறவு நெசவாளர்கள் சங்கம், கூட்டுறவு தீப்பெட்டி தயாரிப்பாளர் சங்கம், தச்சு தொழிலாளர் கூட்டுறவு சங்கம்.

**கூட்டுறவு உழவு சங்கம்**

உள்ளூரில் இருக்கும் வேளாண் குடிகள், தங்களின் நிலங்களை தனித்தனியே பயிரிடுவதற்கு பதிலாக, அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து தங்களின் நிலங்களை ஒன்றாக திரட்டி பேரளவில் விவசாயம் செய்ய உதவும் சங்கம், கூட்டுறவு உழவு சங்கம் எனப்படும்.

அனைத்து விவசாயிகளும் நிலத்தை ஒன்றுத் திரட்டி சங்கமாக செயல்பட்டாலும், அவர்களின் நில உரிமை பாதிக்கப்படாது.

அவர்கள் அனைவரும் சங்கம் அமைத்து, அவர்களே நிர்வாகக் குழுவை தேர்ந்தெடுத்து உழவுச் சங்கத்தை நிர்வகிக்க வேண்டும். கூட்டாக பயிரிட வேண்டும்.

நிர்வாக குழு, சந்தையின் தேவைக்கு ஏற்ப தட்ப வெப்ப நிலையை ஒட்டி, எந்த பயிர் செய்வது, எந்த அளவில் செய்வது என முடிவு செய்யும்.

நிலத்தை பங்காக கொடுத்த விவசாயிகளுக்கு வாடகையும், கூட்டாக திரட்டிய நிலத்தில் உழைத்ததற்கு கூலியும் பெறுவார்கள்.

இம்முறை ரஷ்யாவில் மிகவும் வெற்றி கொண்டது.

**தொழில்துறை கூட்டுறவு**

இந்தச் சங்கங்கள் சிறு தொழில் செய்யும் உற்பத்தியாளர்களால் நடத்தப்படுகிறது.

கூட்டுறவு முறையில், சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் அமைக்க இந்த சங்கம் மிகுந்த உதவு புரிகின்றது.

உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்தும் மூலப் பொருட்களைப் பெற, இந்தச் சங்கங்கள் மிகுந்த உதவு புரிகின்றன

**26.ஆ. தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை?**

**தனிநபர் உரிமை:-** இது தனிநபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். அவர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். வணிக நிறுவனத்தின் உரிமையிலும், அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார்.

**தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு:-** தனது அறிவுத் திறன் மற்றும் பட்டறிவு மூலம் யாருடைய குறுக்கீடின்றிச் செயல்படுகிறார். இதன் மூலம் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார்.

**வரையறாப் பொறுப்பு:-** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

**முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை:-** நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிப்பதால் அவரை மேலும் அதிக இலாபம் ஈட்ட ஊக்கப்படுத்துகிறது.

**அரசு விதிமுறைகள் பின்பற்றாமை:-** இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ அரசின் விதி முறைகளை பின்பற்றப்பட வேண்டிய கட்டாயம் இல்லை.

**குறைந்த மூலதனம் மற்றும் வரையறைக்குட்பட்ட மேலாண்மைத் திறமை:-** தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால் முதல் சிறிய அளிவிலேயே இருக்கும் அதனால் நிதித் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம். மேலாண்மைத் திறமைக் குறைவாக இருக்கும் சூழ்நிலையில், நிறுவன விரிவாக்கம் பெரிதும் பாதிக்கப்படலாம்.